# POWER CRISIS AND THE PROBLEMS FACED BY MANUFACTURING INDUSTRIES

## (A STUDY WITH REFERENCE TO KALMUNAI REGION)

333.793 2072
VIJ
PR

Mr. THARMALINGAM VIJAYAKUMAR

FCM483
Project Report
Library - EUSL

DEPARTMENT OF MANAGEMENT
FECULTY OF COMMERCE AND MANAGEMENT
EASTERN UNIVERSITY
SRI LANKA.

2002

# ஆய்வுச்சுருக்கம்.

கைத்தொழில் துறையானது ஒரு நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக திகழ்கின்றது. இதில் உற்பத்தி கைத்தொழில்களின் பங்கு மிக முக்கியமானதாகும். நாட்டின் பொருளாதாரத்தினை நிர்ணயிப்பதில் இதன் பங்கு கணிசமானது. நாட்டின் பொருளாதாரத்தினை நிர்ணயித்தல், வேலைவாய்ப்பு, வருமானம், வாழ்க்கைத்தர மட்டங்களை நிர்ணயிப்பதில் அதன் பங்கு கணிசமானது. இவ்உற்பத்தி கைத்தொழிலின் வளர்ச்சியே பொருளாதார வளர்ச்சியாகவும், பொருளாதார அபிவிருத்திக்கு அடிப்படையாகவும் அமைகின்றது. இவ் உற்பத்தி கைத்தொழில் துறை பெரும்பாலும் மின்சாரத்தில் தங்கியிருக்கும் ஓர் துறையாக இருப்பதோடு இலங்கையைப் பொறுத்தவரை நீர் மின்வலுவே இதன் உயிர்நாடியாகும். அண்மைக் காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட பாரிய மின் நெருக்கடி இச் உற்பத்தி கைத்தொழில் துறையில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தி இருப்பதனால் இது ஒரு முக்கிய விடயமாகும்.

இலங்கையைப் பொறுத்தவரை இதுவொரு விவசாய நாடாயினும் இன்று கைத்தொழில் துறையில் வளர்ச்சியடைந்து வருகின்ற ஒரு நாடாக உள்ளது. குறிப்பாக உற்பத்தி கைத்தொழில் கணிசமான வளர்ச்சி கண்டிருப்பதோடு அனேகமான வேலைவாய்ப்புக்கள் இத்துறையை நம்பியே உள்ளன. மேலும் நாட்டின் வருமானத்தில் இது கணிசமான பங்கு வகிக்கின்றது.

வளர்ந்து வரும் இலங்கையின் உற்பத்தி கைத்தொழில் துறைக்கு ஒரு சவாலாக அண்மைக்கால நிகழ்வுகள் அமைந்துள்ளது. உற்பத்தி கைத்தொழில் துறையானது மின் சக்தியை நம்பியிருந்தாலும் இலங்கையைப் பொறுத்தவரை நீர் மின்வலுவே இதன் பிரதான பங்காளியாக உள்ளது. அண்மைக் காலங்களில் இலங்கையில் ஏற்பட்ட வரட்சி நீர்மின்வலு உற்பத்தியை பெருமளவு பாதித்ததோடு மின்சார வழங்கலையும் குறைவடையச் செய்துள்ளது. எனவே மின்சாரத்தினை நம்பிபிருந்த உற்பத்தி கைத்தொழில் துறைக்கு இது பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் அன்மைக்காலத்தில் பெருமளவு வீழ்ச்சி ஏற்பட்டமைக்கு காரணம் மின்சார நெருக்கடியே என்றால் அதுமிகையாகாது. மின்சார வழங்கலில் ஏற்பட்ட பாரிய பாதிப்பு உற்பத்திக் கைத்தொழில் நிறுவனங்களில் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக கல்முனைப்பிரதேசத்தில் தொழிற்படும் உற்பத்திக் கைத்தொழில் நிறுவனங்கள்

இம்மின் நெருக்கடியினால் பெருமளவு பாதிக்கப்பட்டதோடு, சமூகத்தாலும் இப்பாதிப்பின் தாக்கங்கள் உணரப்பட்டன. எனவே இப்பாதிப்புக்களை சமூகத்திற்கு எடுத்துரைப்பதாக எனது இவ்வாய்வு அமைந்துள்ளது.

எனது இவ்வாய்விலே முதலாம் அத்தியாயத்தில் மின்சக்தியின் முக்கியத்துவம் பற்றியும் , உற்பத்தி நிறுவனங்களுக்கு இதன் அவசியம் பற்றியும் எடுத்துரைத்துள்ளேன். இரண்டாம் அத்தியாயத்தில் சிறுகைத்தொழில் உற்பத்தி நிறுவனங்கள் தொடர்பாகவும், அவற்றின் உற்பத்திச் செயற்பாட்டிற்கு மின்சாரத்தின் முக்கியத்துவம், மின்நெருக்கடி காரணமாக இவை எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராய்ந்துள்ளேன். மூன்றாம் அத்தியாயமானது சிறப்பாக கல்முனைப் பிரதேசம் குறித்தாக அமைந்துள்ளது. இதில் இப்பிரதேசத்தில் தொழிற்படும் உற்பத்தி நிறுவனங்களின் உரிமையாளர்கள் , தொழிலாளர்களிடம் இருந்து மின்நெருக்கடியின் தாக்கம் தொடர்பான தரவுகள் பெறப்பட்டு அத்தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. நான்காம் அத்தியாயத்தில் இவை தொடர்பான விளக்கங்கள் அமைந்துள்ளன. இறுதி அத்தியாயத்தில் இவை தொடர்பான விளக்கங்கள் அமைந்துள்ளன. இறுதி அத்தியாயத்தில் கல்முனைப் பிரதேசம் தொடர்பாக நான் நிகழ்த்திய ஆய்வின் முடிவினையும், பிரச்சினைகளுக்கு தீர்வாக சில சிபாரிசுகளையும் முன்வைத்துள்ளேன்.

இந்த ஆய்வில் கல்முனைப் பிரதேசத்தில் தொழிற்படும் உற்பத்திக் கைத்தொழில் நிறுவனங்கள் ஆராயப்பட்டுள்ளன. இவை மின்சார நெருக்கடி காரணத்தால் பாதிக்கப்பட்ட விதம் , பாதிப்புக்களினால் ஏற்பட்ட புற விளைவுகள் எள்பன வெளிப்படுத்தப்பட்டதோடு இவற்றை மக்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டிய ஓர் முக்கிய கடமையாகவும் உள்ளது.

# பொருளடக்கம்


| விபரம் | பக்கம் |
|---|---|
| நன்றியுரை | I |
| ஆய்வுச் சுருக்கம் | II - III |
| பொருளடக்கம் | IV |
| அட்டவணை விபரம் | V |
| அத்தியாயம் - 1 | |
| அறிமுகம் | 1 - 6 |
| அத்தியாயம் - 2 | |
| நூலாய்வு | 7 - 30 |
| அத்தியாயம் - 3 | |
| தரவு முன்வைத்தல் | 31 - 42. |
| அத்தியாயம் - 4 | |
| தரவுப் பகுப்பாய்வு | 42. - 47 |
| அத்தியாயம் - 5 | |
| முடிவுகளும் சிபாரிசுகளும் | 48 - 50 |
| உசாத்துணைகள் | 51 |
| பின்னிணைப்புக்கள் | |